N15/2/ABTAM/SP1/TAM/TZ0/XX/T

Diploma Programme
Programme du diplôme
Programa del Diploma

# Tamil B – Standard level – Paper 1
# Tamoul B – Niveau moyen – Épreuve 1
# Tamil B – Nivel medio – Prueba 1

Monday 9 November 2015 (afternoon)
Lundi 9 novembre 2015 (après-midi)
Lunes 9 de noviembre de 2015 (tarde)

1 h 30 m

**Text booklet – Instructions to candidates**

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for paper 1.
- Answer the questions in the question and answer booklet provided.

**Livret de textes – Instructions destinées aux candidats**

- N'ouvrez pas ce livret avant d'y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l'épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

**Cuaderno de textos – Instrucciones para los alumnos**

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.

8815 – 2331



© International Baccalaureate Organization 2015

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

https://xtremepape.rs/

Blank page
Page vierge
Página en blanco

https://xtremepape.rs/

**பனுவல் A**

# ஏழைகளின் ஏந்தல்

❶ புதிய மருத்துவத் துறைகள் தோன்ற வேண்டுமென்பதற்காக, 1960- 1970-களிலேயே அயராது உழைத்தார் மருத்துவர் ஒருவர். அதில் நிகழ்த்திய சாதனைகளுக்காக, 1974-இல் இந்திய அரசு இவருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கியபோது, சென்னை இதழொன்று, “ஏழைகளின் மருத்துவர்” என்று தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டது. அந்தப் புகழுக்குரியவர் டாக்டர் கடியால ராமச்சந்திரா.

❷ வறுமைச்சூழலில் வளர்ந்தாலும் கல்வியைக் கண்ணெனப் போற்றினார் ராமச்சந்திரா; தாம் விரும்பிய மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து சிறந்த மாணவராகத் தேறி மருத்துவர் பட்டம் பெற்றார். மருத்துவராகவும் ஆனார். அவர் பணியில் மிகவும் கண்டிப்பானவர்; சட்டதிட்டங்களில் சற்றும் பிசகாதவர்; பூசி மெழுகாமல் உண்மை உரைப்பவர்; ஆயினும், அதிர்ந்து பேச அறியாதவர்.

❸ நோயாளியை நேரடியாகப் பரிசோதித்து அறிகுறிகளைக் கொண்டு நோயைக் கண்டறிவதில் ராமச்சந்திரா வல்லவர். நோயாளி நடந்து வரும்போதே கூர்ந்து கவனித்துச் சோதனையைத் தொடங்கிவிடுவார். சில சமயம், நோயாளி வாய் திறப்பதற்கு முன்னரே, என்ன நோய் என்பதைக் கண்டறிந்து கூறிவிடுவாராம்; மருந்துச்சீட்டையும் எழுதிவிடுவாராம். இந்தத் தனித்திறன் அவருக்குப் பல பாராட்டுகளைப் பெற்றுத் தந்தது.

❹ மருத்துவமனை ஊழியர்களிடம் கண்டிப்புக் காட்டிய அளவுக்கு அன்பும் காட்டினார் ராமச்சந்திரா. இதனால், ஊழியர்களும் அவர்களுடைய உறவினர்களும் சிகிச்சை பெற வேண்டுமெனில் இவரையே நாடி வந்தனர். மருத்துவ சிகிச்சையோடு அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கினார் இவர். பொது மருத்துவமனையில் பணியாற்றிய நேரத்தைத் தவிர்த்துத் தனியாகவும் மருந்தகம் வைத்திருந்தார் ராமச்சந்திரா. அங்கு வறுமையில் வாடுபவர்களுக்கும், ஏழைபாழைகளுக்கும் அவர் இலவச சிகிச்சையோடு மருந்துகளையும் தந்துதவினார்.

❺ இளமையில் தாம் வறுமையில் வாட நேர்ந்ததை இவர் என்றும் மறக்கவில்லை. அதுபோன்ற துயரம் தன்னைச் சார்ந்தவர் யாருக்கும் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். ஆடம்பரத்தை வெறுத்த ராமச்சந்திரா, பழக்க வழக்கங்களில் எளிமையைக் கடைப்பிடித்தார். தம் உணவுத்தட்டைத் தாமே கழுவுவார்; தம் துணிகளைத் தாமே துவைத்துக்கொள்வார். தம் மகள்களுக்கு ஆடம்பரமான உடைகளை வாங்கித் தரவில்லை. ஆனால், நிறைய நகைகளைச் சேர்த்து வைத்தார். அவற்றிற்கு என்றும் மதிப்பு இருக்கும் என்பதில் அவர் தெளிவான சிந்தனை கொண்டிருந்தார்.

❻ மருத்துவத்தில் ராமச்சந்திராவை மிகவும் ஈர்த்தது, கார்டியாலஜி என்னும் இருதய இயல் துறையாகும். வெளிநாட்டில் இத்துறையில் உபகாரச் சம்பளத்தோடு உயர்கல்வி பயிலும் அரிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. ஆனால், தம்மை வெளிநாடு அனுப்பத் தாயார் தயங்கியதால், அவருக்காகத் தம் வாழ்நாள் கனவையே கைவிட்டார் இவர். தம் சொந்த நாட்டிலேயே பலருக்கும் உதவக்கூடிய வகையில் தம் மருத்துவப் பணியை மேற்கொண்டு ஏழைகளுக்குச் சேவையாற்றிய ராமச்சந்திரா உண்மையில் ஏழைகளின் ஏந்தலாகத் திகழ்ந்தார்.

A Malini, *Amudhasurabhi* (2014)



https://xtremepape.rs/

**பனுவல் B**

# இயற்கை கொடுத்த கொடை

இன்று மனித இனம் தன்னையும் அறியாமலேயே பெரும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. வளர்ச்சி என்னும் பெயரில் உலகம் முழுதும் உள்ள நாடுகள் பூமிக்கு இயற்கை கொடுத்த கொடையான காடுகளை அழித்து வருகின்றன. காடுகள் இல்லையேல் பூமிக்கும் மனித இனத்துக்கும் ஏற்படக்கூடிய விளைவுகளைப்பற்றி மனிதன் சிந்திக்க வேண்டும்.

நாம் சுவாசிக்கும் காற்றில் 21 சதவீதம் உயிர்க்காற்று (ஆக்ஸிஜன்) உள்ளது. இதை மட்டுமே நுரையீரல்கள் பயன்படுத்தி உயிர்களை இயங்கச் செய்கின்றன. காற்றில் உயிர்க்காற்றின் அளவு சீராக இருக்கக் காடுகளே காரணம். தாவரங்கள் காற்றில் உள்ள நச்சு வாயுவான கரியமிலவாயுவை (கார்பன்டை ஆக்ஸட்) உட்கொண்டு சுத்தமான உயிர்க்காற்றை வெளியேற்றுகின்றன. காற்றில் கரியமிலவாயு 0.4 சதவீதம் மட்டுமே இருக்க வேண்டும். உலகில் உள்ள உயிரினங்கள் வெளியேற்றும் சுவாச காற்றிலும், பல கோடி வாகனங்கள் வெளியேற்றும் புகையிலும், உலகில் உள்ள பல கோடி தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையிலும் உள்ள கரியமிலவாயுவைக் காடுகளே உள்வாங்கி வாயு மண்டலத்தைச் சுத்தப்படுத்துகின்றன. ஆனால் காடுகள் தொடர்ந்து அழிக்கப்படுவதால் இன்று காற்றின் மாசுத்தன்மை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

கரியமில வாயுக்களின் உற்பத்திக்கும் நம் பூமியின் தட்பவெப்ப நிலைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, நிலக்கரி எரிப்பதனால் ஏற்படும் மாசு, பிளாஸ்டிக் குப்பையை எரிப்பதால் உண்டாகும் மாசு போன்றவற்றால் கரியமில வாயுக்கள் உண்டாகின்றன. இந்த வாயுக்கள் பூமியைச் சூடேற்றுகின்றன. நாம் செயற்கையாக உருவாக்கும் கரியமில வாயுக்களினால் பூமியின் பருவ நிலைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றம் காரணமாக உலகில் சராசரி வெப்பநிலை படிப்படியாக அதிகரித்து அபாயகரமான நிலையை அடைந்து கொண்டிருக்கிறது.

காடுகள் இல்லையெனில் ஆறுகள் இல்லை. தென்னிந்தியாவில் உள்ள அனைத்து நதிகளும் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள காடுகளில் உருவாகின்றன. மேற்கு தொடர்ச்சி மலை உச்சியில் இருக்கும் புல்லும், சோலைகளும், காடுகளும் பொழியும் மழைநீரைத் தேக்கி வைத்துச் சிறிது சிறிதாக வெளியேற்றுகின்றன. இதன் மூலமே நதிகள் உருவாகின்றன. இக்காடுகள் அழிந்தால் நதிகள் வறண்டு விடும். எனவே தண்ணீருக்கு அடிப்படையே காடுகள்தான் எனப் புரிகிறது அல்லவா?

அடர்ந்த காடுகளின் குளிர்ச்சியால் ஈர்க்கப்படும் நீராவியானது, மேகமாகத் திரண்டு குளிர்ந்து மழையாக மாறுகிறது. இதனால் ஏற்படும் குளிர்ச்சி மீண்டும் மீண்டும் மழை பொழிவை ஏற்படுத்துகின்றன. மழைநீர் நேரடியாகத் தரையை வந்தடைந்தால் மண் அரிப்பு ஏற்பட்டு மண்வளம் அழிந்துவிடும். ஆனால், காடுகளில் மழை பெய்யும் போது மண் அரிப்பு ஏற்படாமல், காடு மழைநீரை உள்வாங்கிச் சேமிக்கிறது. நீரில் ஒரு பகுதியைப் பூமிக்குள் அனுப்பி, நிலத்தடி நீர் வளத்தையும் பாதுகாக்கிறது. ஆக மண்வளம், நதிகள் பாதுகாப்பு, நிலத்தடி நீர்ப் பாதுகாப்பில் காடுகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

https://xtremepape.rs/

மனிதனுக்கு ஏற்படும் பல நோய்களுக்கு மரங்களிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் இருந்தே அரிய மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. புற்றுநோய் எதிர்ப்புச் சக்தி உள்ள தாவரங்கள் 70 சதவீதம் காடுகளில் மட்டுமே உள்ளன. இன்று இந்த நோய் பாதித்த 80 சதவீத குழந்தைகளைத் தாவரத்தால் தயாரிக்கப்பட்ட மருந்துகளே காப்பாற்றி வருகின்றன. மேலும், மனிதனைத் தாக்கும் பல்வேறு நோய்களுக்கும் காடுகளில் நிறைந்திருக்கும் தாவர வகைகளே அருமருந்தாகப் பயன்படுகின்றன.



Dr C P Rajkumar, www.dinamalar.com (2015)



https://xtremepape.rs/

**பனுவல் C**

# இலாபம் தரும் கலையார்வம்

❶ கல்வி பயிலும் காலங்களில் பாடங்களில் மட்டுமே தம் முழுக்கவனத்தையும் செலுத்தும் மாணவர்களைக் கண்டிருக்கின்றோம். அவர்களிடையே கல்வி கற்றுக்கொண்டே தங்கள் விருப்பத்துறையிலும் ஈடுபட்டுப் பயன்மிக்க வழியில் நேரத்தைச் செலவிடும் இளைஞர்களும் இருக்கவே செய்கிறார்கள். பல சவால்களைக் கடந்து சாதனை படைக்கும் இவர்கள் பாராட்டுக்குரியவர்கள். கல்லூரியில் படித்துக்கொண்டே மற்றவர்களுக்கு நடன வகுப்புகள் நடத்துவதால் மாதம் ரூபாய் 20,000-க்கும் அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள் மதுரையைச் சேர்ந்த மாணவர்கள், சுபாஷனி, ஆனந்த், வேணு ஆகியோர்.

❷ **[ – X – ]**



கல்லூரிகளுக்கிடையே நடக்கும் போட்டிகளில் பங்கேற்க வேண்டிப் பயிற்சி பெறுவதற்காகத் தனியிடம் ஒன்றைத் தேடினர் அந்த மூன்று நண்பர்கள். அம்முயற்சியில்தான் அவர்களின் பயணம் தொடங்கியது. ஓர் இடத்தை வாடகைக்குப் பெற்று அங்குப் பயிற்சி மேற்கொண்டனர். 200-க்கும் மேற்பட்ட மேடைகளில் ஆடிப் பிரபலம் அடைந்தனர். தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாடு சார்பில் பங்கேற்று வெற்றியும் பெற்றனர். “நண்பர்கள் சிலர் எங்களை அணுகி நடனம் கற்றுத் தரும்படி வேண்டினார்கள். அதற்குப் பணமும் தருவதாகக் கூறினார்கள். இடவசதி இருந்ததால் அவர்களின் கோரிக்கைக்குச் செவிசாய்த்தோம். சிறு குழுவாகத் தொடங்கி, இப்போது பலருக்கும் நடன வகுப்புகளாகவே நடத்தத் தொடங்கிவிட்டோம்,” என்று தாங்கள் உருவான கதையைச் சுருக்கமான விளக்கினர் அம்மூவரும்.

❸ **[ – 20 – ]**

இக்கால இளைஞர்களை அதிகம் ஈர்க்கும் ஹிப் ஹாப், நாட்டுப்புறம், சால்சா முதலான பலவகை நடனங்களை அவர்கள் ஆர்வத்தோடு கற்றுக்கொண்டனர்; நடனப்போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றனர். நாளடைவில் அந்த நடனங்களை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்துப் பயிற்சியளிக்கத் தொடங்கினர். “நடனப்போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றதன் மூலம் கிடைத்த தொகையில் இடத்துக்கான வாடகை, நடனத்துக்குத் தேவையான சீருடை, ஒலிப்பதிவுக் கருவிகள், வீடியோ கருவிகள் முதலானவற்றுக்கான செலவினங்களைச் சமாளித்தோம். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காரணத்தால், நிறையக் கல்லூரிகளுக்கும் சென்று பயிற்சியளிக்கும் வாய்ப்புகளும் கிடைத்தன. இதற்குக் கட்டணத்தொகை வசூலிக்கத் தொடங்கியபோது எங்களின் வருமானம் பலமடங்காகப் பெருகியது,” என்று விவரித்தார் ஆனந்த்.

https://xtremepape.rs/

❹　**[ – 21 – ]**

பள்ளி மாணவர்களுக்கும் மட்டும் நடத்தப்பட்டு வந்த நடனவகுப்புகளை மேலும் எவ்வாறு விரிவுபடுத்தலாம் என்று ஆலோசித்தபோது உடற்பயிற்சி, ஆரோக்கியம் போன்ற வகையில் பெரியவர்களுக்கும் நடனவகுப்புகளை நடத்தலாம் என்ற எண்ணம் உதித்தது. "ஒரு புத்தாக்க முயற்சியாக இந்த நடனவகுப்புகளை இல்லத்தரசிகளுக்கும் நடத்தலாம் என்று யோசித்தோம். வீட்டிலிருக்கும் பெண்கள் நிறையப் பேர் தங்கள் உடம்பின் எடையைக் குறைக்கச் சிரமப்படுகின்றனர். தங்கள் உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ள அவர்களுக்குச் சரியான வழிகாட்டுதல் இல்லை என்பதை அறிந்து, நடனத்தின் மூலம் அவர்களுக்கு உதவ எண்ணினோம். எரோபிக்ஸ் என்னும் உடற்பயிற்சி நடனத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினோம்," என்று உற்சாகத்தோடு விளக்கினார் சுபாஷினி.

❺　**[ – 22 – ]**

இந்த உடற்பயிற்சி சார்ந்த நடனவகுப்பில் சேர்ந்து பயிற்சி மேற்கொண்ட இல்லத்தரசிகளால் குறுகிய காலத்திலேயே நல்ல பலன்களைக் காண முடிந்தது. தனியாக உடற்பயிற்சி செய்வதைக் காட்டிலும் குழுவாக ஆடி உடற்பயிற்சி செய்வது மனத்திற்கு உற்சாகம் தருவதாகவும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதாகவும் பலரும் உணர்ந்தனர். "பொதுவாக, பெண்களுக்கு மன அழுத்தம் அதிகமாக இருக்கும். அவர்கள் மனச்சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சி பெறவும், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ளவும் இந்த நடனம் பெரிதும் உதவும். தேவையற்ற உணவுக் கட்டுப்பாடு ஏதுமின்றி, எளிய வழியில் உடல்நலத்தைப் பெற இது உதவிய காரணத்தால் இதற்குப் பெரிய அளவில் வரவேற்பு இருந்தது," என்று விளக்கினார் வேணு.

❻　**[ – 23 – ]**

இந்த நடனப் பள்ளியின் மூலம் மாதம் ரூபாய் 20,000 வரை வருமானம் கிடைக்கிறது. இதை முதலாகக் கொண்டு நடனப் பள்ளியை மேலும் விரிவுபடுத்தி, ஒரு கலைக்கழகமாக உருவாக்குவதே இந்த இளைஞர்களின் வாழ்நாள் இலட்சியமாகும். இளைஞர்களிடையேயும் பெரியவர்களிடையேயும் பெருகி வரும் நடன ஆர்வம் மிகுந்த இலாபம் ஈட்டித்தரும் துறையாக எதிர்காலத்தில் உருவெடுக்கும் என்பதில் ஐயமில்லை; இளைஞர்களின் கனவும் கனிந்து வரும் காலமும் தூரமில்லை.

A R Kumar, *Vikatan Magazine* (2014)



https://xtremepape.rs/

**பனுவல் D**

# வீட்டுப் பாதுகாப்பில் நவீன தொழில்நுட்பம்



❶ இன்றைய காலத்தில் கட்டுமானத்துறையில் நவீன தொழில்நுட்ப வசதிகள் பல்கிப் பெருகியுள்ளன. நாளுக்கு நாள் புதுப்புதுக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தற்போது வீட்டினைப் பாதுகாப்பாகப் பராமரிக்கும் புதுமையான தொழில்நுட்பம் கட்டுமானத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. “ஹோம் ஆட்டோமேஷன்” என்று அழைக்கப்படும் இந்தப் புதிய தொழில்நுட்பத்தில் வீட்டின் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் ஸ்மார்ட் போன்கள் என்னும் திறன்பேசிகள் மூலம் தேவைக்கேற்ப அமைத்துக்கொள்ள முடியும்.

❷ வீட்டில் வசிக்கும் காலங்களிலும், வீட்டைப் பூட்டிவிட்டு வெளியில் செல்லும் காலங்களிலும் இந்தத் தொழில்நுட்பம் பயனுள்ளதாக இருக்கும் என்கின்றனர் கட்டுமான வல்லுநர்கள். ஹோம் ஆட்டோமேஷன் என்ற இந்தத் தொழில்நுட்பமுறையில் வீட்டின் பாதுகாப்பு முறை, தட்பவெட்ப நிலைகள், வீட்டைக் கண்காணிக்கும் வீடியோ நிழற்படக்கருவி போன்றவற்றின் நிலைகளை நமது கைகளில் இருக்கும் திறன்பேசிகள் மூலம் கண்காணிக்க முடியும்.

❸ மின்னஞ்சல், பேஸ்புக், டுவிட்டர் போன்றவை திறன்பேசிகளில் இயங்குவது போலத்தான் இந்தத் தொழில்நுட்பமும் இயங்குகிறது. சில வேளைகளில் வீட்டில் இருக்கும் மின்சாரத்தின் இயக்கத்தை நிறுத்த மறந்துவிட்டு வெளியே செல்ல நேரிடலாம். இம்மாதிரியான சூழ்நிலைகளில் கற்றாடி, தொலைக்காட்சி, விளக்குகள் போன்றவை இயங்கிக்கொண்டே இருக்கும். இதனால், வீண் மின்சார விரயம் ஏற்படுவது மட்டுமன்றிச் சில வேளைகளில் பாதுகாப்பு இடர்ப்பாடுகளையும் உண்டாக்கக்கூடும். இந்த நவீன தொழில்நுட்பம் மூலமாக வீட்டின் விளக்குகளை அணைத்தல், வீட்டினைப் பூட்டுதல், வீட்டை வீடியோ நிழற்படக்கருவி மூலமாகக் கண்காணித்தல் போன்ற பணிகளை வெளியிலிருந்தபடியே செயற்படுத்த முடியும்.

❹ பூட்டிய வீட்டிற்குள் யாராவது அத்துமீறி நுழைய முயன்றாலோ வீட்டில் அந்நியர் ஒருவர் நுழைந்து தவறான நடவடிக்கைளில் ஈடுபட முயன்றாலோ சென்சார் என்னும் உணரியின் உதவியுடன் கண்டறியப்பட்டு உடனடியாகத் திறன்பேசிக்குத் தகவல் வந்துவிடும். இந்த வசதி குற்றச்செயல்களிலிருந்து நம்மைக் காப்பதுடன், நம் உடைமைகள் பறிபோகாமல் இருப்பதை உறுதிசெய்கிறது. வீட்டின் சூழ்நிலையை உடனுக்குடன் அறிவிப்பதுடன், பயனீட்டாளர் வழங்கும் கட்டளைகளை ஏற்று அதன்படி இயங்கவும் இந்தத் தொழில்நுட்பத்தால் இயலும். மேலும், இவ்வசதியால் வீட்டின் உள்ளே இருக்கும் தட்ப வெப்பநிலையை அறிந்துகொள்ளவும், விருப்பப்படி காற்று வசதியை மாற்றி அமைத்துக்கொள்ளவும் முடியும்.

https://xtremepape.rs/

❺ இந்தத் தொழில்நுட்பத்திற்குச் சென்னை, பெங்களூர், டெல்லி, மும்பை முதலான பெருநகரங்கள் பலவற்றிலும் **[ – X – ]** இருப்பதாகக் கட்டட வல்லுநர்கள் உறுதிப்படுத்துகின்றனர். அண்மைய காலங்களில் இதனுடைய **[ – 38 – ]** அதிகரித்திருப்பதையும் நவீன கட்டட அமைப்புகளில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவதையும் **[ – 39 – ]** காணமுடிகிறது. மக்களிடையே இதன் செல்வாக்குக் கூடிவருவதால், வீட்டுப் பாதுகாப்புத் தொடர்பான குற்றச் செயல்கள் **[ – 40 – ]** குறையலாம் என்ற எதிர்பார்ப்பும் பெருகியுள்ளது. மக்களின் வாழ்க்கை முறை பெரிதும் தொழில்நுட்பத்தைச் சார்ந்திருப்பதால், இது போன்ற நவீன சாதனங்களின் **[ – 41 – ]** நம் வாழ்க்கை முறையைப் பெரிதும் மாற்றியமைக்கக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன. அதே வேளையில், மக்கள் பலருக்கும் இது போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து **[ – 42 – ]** வேண்டிய கடமையும் அரசாங்கத்தைச் சார்ந்துள்ளது.

Sugumar, *Tamil Star* (2014)

https://xtremepape.rs/